பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

19 07 2026 SUNDAY 6.30 PM

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

2) தேசிய கல்விக்கொள்கையில் திறன் மேம்பாட்டிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

3) அரசுப்பள்ளி மாணவர்களின் சீருடையை மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

4) விவசாயிகளுக்கு எப்போதும் உறுதுணையாக தவெக அரசு இருக்கும் என்று உணவுத்துறை அமைச்சர் திரு வெங்கட்ரமணன் கூறியுள்ளார்.

5) ஆசிய ஜூனியர் ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Kentu Lap வெண்கலப்பதக்கம் வென்றார்.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>>

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜூ கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்று புதுதில்லியில் இதுதொடர்பாக நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

ஜனநாயகத்தை வலுப்படுத்த ஆக்கப்பூர்வமான விவாதங்கள் நடைபெற வேண்டியது அவசியமாகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

இதனை உணர்ந்து எதிர்க்கட்சிகள் செயல்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

எந்தவொரு பிரச்சினை குறித்தும் விவாதிக்க மத்திய அரசு தயாராக உள்ளதாகவும் திரு கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

இந்த மழைக்கால கூட்டத்தொடர் நாளை தொடங்கி, அடுத்த மாதம் 13-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.

<<<<<<>>>>>>

தேசிய கல்விக்கொள்கையில் திறன் மேம்பாட்டிற்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கூறியுள்ளார்.

இன்று கோவையில் பட்டமளிப்பு விழா ஒன்றில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

ஆராய்ச்சிக்கு ஊக்கம் அளிப்பதற்கான அம்சங்களும் தேசிய கல்விக்கொள்கையில் இடம்பெற்றிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மாணர்களின் சிறந்த எதிர்காலத்தை உறுதி செய்ய, பாரம்பரிய கல்வி முறையோடு டிஜிட்டல் தொழில்நுட்பமும் இணைந்து கற்பிக்கப்பட வேண்டியது அவசியம் என்று அவர் கூறினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு மாணவர்கள் பங்களிக்க வேண்டும் என்றும் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>>

அரசுப்பள்ளி மாணவர்களின் சீருடையை மாற்றுவது குறித்து பரிசீலிக்கப்பட்டு வருவதாக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு ராஜ்மோகன் கூறியுள்ளார்.

மதுரை மாவட்டம் மாங்குளம் சமணப்படுகையில் இன்று தொல்லியல் துறை அதிகாரிகளுடன் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

சீருடையை மாற்றுவதற்கான பரிந்துரை முதலமைச்சரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன் அடிப்படையில், இதுதொடர்பான அறிவிப்பினை முதலமைச்சர் வெளியிடுவார் என்றும் திரு ராஜ்மோகன் கூறினார்.

<<<<<<>>>>>>

விவசாயிகளுக்கு எப்போதும் உறுதுணையாக தவெக அரசு இருக்கும் என்று உணவுத்துறை அமைச்சர் திரு வெங்கடரமணன் கூறியுள்ளார்.

கடலூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்களை இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

நெல் கொள்முதல் வெளிப்படைத் தன்மையுடன் நடைபெறுவதை தவெக அரசு உறுதி செய்யும் என்று அவர் கூறினார்.

இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி நெல் கொள்முதல் நடைபெறும் என்றும் திரு வெங்கடரமணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தவெக அரசு தாக்கல் செய்ய உள்ள பட்ஜெட், ஆக்கப்பூர்வமாகவும், வளமையை உறுதி செய்யும் வகையிலும் இருக்கும் என்று சமூக நீதித்துறை அமைச்சர் திரு வன்னியரசு கூறியுள்ளார்.

ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் தாட்கோ தொழிற்கூடப்பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

(Sound Byte – வன்னியரசு - 47 Sec. )

<<<<<<>>>>>>

முதலமைச்சர் திரு விஜய் நேர்மையான அரசு நிர்வாகத்தை வழங்க முயற்சி மேற்கொண்டுள்ளதாக தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு மாணிக்கம் தாகூர் கூறியுள்ளார்.

இன்று மதுரையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், தவெக அரசின் தொடக்கம் சிறப்பாக உள்ளதாக கூறினார்.

<<<<<<>>>>>>

ஆசிரியர் தகுதி தேர்வில் 13 ஆண்டுகளுக்குமுன் தேர்ச்சி பெற்ற 410 பேருக்கு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி உடனடியாக பணி வழங்க தவெக அரசு முன்வர வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இப்பிரச்சினையில் அரசு தனது நிலைப்பாட்டினை முன்னுக்குப்பின் மாற்றியதன் காரணமாக ஆசிரியர்களின் எதிர்காலம் கேள்விக்குரியாகி உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு, 2012 மற்றும் 13-ஆம் ஆண்டுகளில் நடத்தப்பட்ட தகுதி தேர்வில் வெற்றிபெற்று இதுவரை ஆசிரியர் பணி கிடைக்காத 410 பேருக்கு உடனடியாக ஆசிரியர் பணி வழங்க வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

நீலகிரி மாவட்டம் உதகை அருகே உள்ள மஞ்சகொம்பை கிராமத்தில் ஏழு காட்டு யானைகள் முகாமிட்டுள்ளன.

இதன் காரணமாக பொதுமக்கள் அச்சமடைந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(Voice Byte – சரவணன் - 42 Sec. )

<<<<<<>>>>>>

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் வடகடலோர மாவட்டங்களில் இன்று மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

மாநிலத்தின் இதர ஒரு சில பகுதிகளில் அடுத்த நான்கு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

## மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டம் திருமங்கலத்தில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மாரத்தானை மாநில அமைச்சர் திரு நிர்மல் குமார் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

நாகை மாவட்டத்தில் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் குறுவை பருவத்திற்கு விவசாயிகள் இம்மாதம் இறுதிவரை பதிவு செய்யலாம் என்று ஆட்சியர் திரு பிரவீன் குமார் கூறியுள்ளார்.

----------------

தருமபுரியில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

<<<<<<>>>>>>

## விளையாட்டுச் செய்திகள்

*ஆசிய ஜூனியர் ஜூடோ சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Kentu Lap வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*ஜோர்டானின் அம்மானில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் 60 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

------------------

*Budapest சர்வதேச மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றுள்ளது.*

*மகளிர் 76 கிலோ எடைப்பிரிவில் Kajal தங்கப்பதக்கத்தை வென்றார்.*

*53 கிலோ எடைப்பிரிவில் Antim Pangal-லும், 57 கிலோ எடைப்பிரிவில் Neha Sharma-வும் வெள்ளிப்பதக்கத்தை வென்றனர்.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 3 தங்கம், 4 வெள்ளி, 5 வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.*

----------------

*ஆல் இங்கிலாந்து ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Sai Nachiketh Bhatraju இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-13, 21-14 என்ற செட் கணக்கில், Wales-ன் Mebel Mano Kurian-ஐ வென்றார்.*

*மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில், Karthik Rupa Suhaas வெற்றிபெற்று இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

-------------

*ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் பட்டம் வென்று வரலாற்று சாதனை படைத்த பி வி சிந்துவுக்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி உட்பட தலைவர்கள் பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.*

-----------------

*காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்கான தொடக்க விழா வீரர்கள் அணிவகுப்பில் இந்தியா சார்பில் Mirabai Chanu மற்றும் Lovlina Borgohain தேசியக் கொடியை ஏந்திச் செல்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.*

*இப்போட்டிகள் கிலாஸ்கோவில் வரும் 23-ஆம் தேதி தொடங்கி, அடுத்த மாதம் 2-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளன.*

-------------------

*சென்னை கிராண்ட்மாஸ்டர் செஸ் போட்டியின் மூன்றாவது சுற்று முடிவில் இந்தியாவின் Arjun Erigaisi இரண்டாவது இடத்தில் உள்ளார்.*

-----------------

*ஆசிய Age Group நீச்சல் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Abdul Hafeez தங்கப்பதக்கம் வென்றார்.*

*பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் 200 மீட்டர் பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*<<<<<<>>>>>>*